கூடுதல் சார்பு நீதிமன்றம், திருநெல்வேலி

MCOP.No.1357/2019

2025 வது ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07-ம் நாள் எ.ம.சா.1-ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது / பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **உதயசூரியன்** | வட்டம் | |
| க.பெ / த.பெ | **சுந்தரம்** | கிராமம் | |
| வயது | **38** | மதம் | |

**<u>07.08.2025. முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த மனு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.
மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன். டிஎன் 65 ஒய் 1094 என்ற வாகனத்தின் காப்பீடு சான்று உண்மை நகல் **எமசாஆ.1,** மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் 1 ம் எதிர்மனுதாரர் வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். மனுதாரர் எங்கள் நிறுவனத்தை பொறுத்து 3 ம் தரப்பினர் என்றால் சரிதான். பாலிசி விதிமுறை மீறல் எதுவும் இல்லை என்பதால் எங்கள் நிறுவனம் தான்

இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தில் 3 நபர்கள் மட்டுமே பயணிக்க முடியும். விபத்து சமயத்தில் 6 நபர்கள் பயணித்துள்ளார்கள் எனவே அது விதிமுறை மீறல் ஆகும். இழப்பீடு வழங்க கூடாது என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் 3 நபர்கள் தான் பயணம் செய்தார்கள் என்றாலும் அதில் மனுதாரருக்கு தான் காயம் ஏற்பட்டுள்ளது என்றாலும் 6 பேர் என தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பாலிசி ஊர்ஜிதத்தில் இருந்ததால் எங்கள் நிறுவனம் இழப்பீடு செலுத்துவிட்டு 1 ம் எதிர்மனுதாரரிடம் வசூலித்துக்கொள்ளலாம் என்றால் சரியல்ல.